நாள் : 15.07.2022

## அசல் வழக்கு எண்: 13/2013

வா.சா.-1 தங்கமணி - முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

வாதி தரப்பில் வாதி முன்னிலை, என்னால் சத்தியபிரமாண வாக்குமூலம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணையானது கடந்த 05.03.2015 அன்று துவக்கம் செய்யப்பட்டு 04.03.2022 ம் தேதி முடிவுற்ற நிலையில் இன்று வாதி முன்னிலை பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி ஆஜர் இல்லை . கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . பிரதிவாதிக்காக மேற்படி வாதி தங்கமணி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் மன்னார்குடி நகரம் வார்டு எண்.1, பிளாக் எண்.58 , டி.எஸ்.3721. இதில் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் மொத்தம் 40000 (நாற்பதாயிரம்) சதுரடியாகும். மேற்படி 40000 சதுரடியில் வழக்கு தாவா சொத்து எவ்வளவு சதுரடி என்றால் எனக்கு தெரியாது. மொத்தம் 40000 சதுரடிக்கும் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 18000 சதுரடிக்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த 18000 சதுரடிக்கு யார் யார் மீதெல்லாம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி 4 நபர்களின் பெயர்களை சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும் அவர்கள் வி.ரெங்கராஜன், ஆர். மலர்கொடி, ஆர்.முருகராஜன், ஆர்.கோவிந்தராஜன் ஆவார். ஆர்கோவிந்தராஜன்தான் இந்த வழக்கின் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். ஆர்.ரெங்கராஜன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால்சரிதான். மலர்கொடி எனது அண்ணன் ரெங்கராஜன் மனைவி என்றால் சரிதான். முருகராஜன் மற்றும் கோவிந்தராஜன் ஆகிய இருவரும் எனது அண்ணன் ரெங்கராஜனின் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சதுரடி 18000 தை தவிர்த்து மீதமுள்ள சதுரடிகள் யார் பெயரில் இருந்தது என்றால் மீதமுள்ள சதுரடிகளில் 10500 சதுரடி எனது மனைவி டாக்டர் தையல் நாயகி என்பவர் பெயரில் உள்ளது. மீதமுள்ள சுமார் 9600 அல்லது 10000 சதுரடிகள் எனது மகள் டாக்டர் வித்யாவிற்கு செட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்துவிட்டேன்.

3. வழக்கு தாக்கல் செய்யும்போது 40000 சதுரடி யார் பெயரில் இருந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது 18000 சதுரடி என் பெயரில் இருந்தது. எனது மனைவி டாக்டர் தையல் நாயகிக்கு எந்த வருடம் 10500 சதுரடியை என் மனைவிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் வருடம் சரியாக ஞாபகமில்லை சுமார் 1985 வருடமாக இருக்கலாம். எனது மகள் வித்யாவிற்கு எப்போது செட்டில்மெண்ட் எழுதிவைத்தேன் என்றால் என் மனைவிக்கு எழுதிவைத்ததிலிருந்து சுமார் 2 அல்லது 3 வருடங்கள் கழித்து எழுதிவைத்துவிட்டேன்.

4. மேற்படி நான் செய்து கொடுத்த 2 செட்டில்மெண்ட் ஆவணங்களுக்கும் நகல் என்னிடம் உள்ளதா என்று கேட்டால் ஆம் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

*கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது தரப்பு பிரதிவாதியிடம் சங்கதிகளைப் பெற்று பின்னர் குறுக்கு விசாரணையை தொடர அனுமதி கேட்கிறார். நீதிநலன் கருதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.*